விமர்சனம் - 33

## திஸ்ஸநாயகத்துக்கு இடப்பட்ட விலங்கு!!!

திஸ்ஸநாயகத்தை மதிக்கும் சிவில் சமூகத்தையும், சர்வதேசத்தையும் விஷேடமாக சர்வதேச ஊடக சமூகத்தையும் கவலைக்குள்ளாக்கியுள்ள, அதேபோல் எவருமே நியாயம் என ஏற்றுக் கொள்ளாத தீர்ப்பினால் ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகம் (திசைநாயகம்) 20 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வழங்கப்பட்ட இத்தீர்ப்பின் பின்னர் இன்று வரையும் சிவில் சமூகத்துக்கும் ஊடக செயற்பாட்டாளர்களுக்கும் முக்கிய தலைப்பாகவிருப்பது இச்சம்பவமே. இத்தீர்ப்புடன் இந்நாட்டின் சில ஊடகங்களில் சிறிதளவாகவும் சிவில் சமூகத்தில் மிக ஆழமாகவும் பயங்கரவாதத் தடுப்புச் சட்ட மூலம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியன காரணமாக கருத்துகளை வெளிப்படுத்தும் சுதந்திரத்துக்கு பாரிய அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட விதம் குறித்து கருத்துப் பரிமாற்றம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில் மூன்று குற்றச்சாட்டுகளுக்கு அவருக்கு வழங்கப்பட்ட 20 வருட கால தண்டனையை பத்து வருட காலம் அனுபவிக்கும் வகையில் வழங்கும்படி எதிர்தரப்பு சட்டத்தரணி வேண்டுகோள் விடுக்காததால் 20 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாகவும் அதேபோல் எதிர்தரப்பு சட்டத்தரணியின் சில பலவீனங்கள் தொடர்பாகவும் இப்போது வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன. பயங்கரவாத தடுப்புச் சட்டம் என்ற கொடூர சட்டத்தின் கீழ் சிறைக்கு அனுப்பப்பட்ட இறுதி ஊடகவியலாளராக இருக்க முடியாதென்றபோதும் முதலாவது ஊடகவியலாளரான இவருக்காக அளிக்கப்பட்ட சில சாட்சியங்களும் இவருக்கு சாதகமில்லாமல் போன விதம் குறித்தும் தீர்ப்பை ஆய்வு செய்த சில ஊடகச் செய்திகளின் மூலம் தெரியவந்துள்ளது.

எப்படியிருந்தும் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு மூலகாரணம் இவரால் வெளியிடப்பட்ட “நோத் ஈஸ்டர்ன் மன்த்லி” என்ற சஞ்சிகையே. 01 ஜுன் 2006 முதல் 01 ஜுன் 2007 வரையிலான காலப் பகுதியில் இவரால் எழுதப்பட்ட இரு கட்டுரைகளின் பகுதிகள் ஒரு குற்றச்சாட்டுக்கு காரணமாகும். சஞ்சிகையை வெளியிட்டது, விநியோகித்தது அடுத்த குற்றமாகும். இக்குற்றச்சாட்டுகளுக்காக தலா ஐந்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இச்சஞ்சிகையின் மூலம் பயங்கரவாதத்துக்கு நிதி சேகரித்தது பத்து வருடகால சிறைத் தண்டனை வழங்கப்பட்டதற்கான குற்றமாகும். ஆய்வுக்குட்பட்ட காலப் பகுதிக்குள் ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் மூலம் சம்பந்தப்பட்ட கட்டுரைகளில் யுத்த சூழல் காரணமாக தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பம், துயர்கள் குறித்தே அவர் எழுதியுள்ளதாகத் தெரிகின்றது. இவை மனிதாபிமான அறிக்கையிடலாகும். இந்த விடயங்களின் உண்மை, பொய் இப்போது தீர்ப்புக்கு கீழ்ப்பட்டதாகும். இருந்தும் தமிழ் மக்களுக்காக ஆங்கில மொழியில் மனிதாபிமான செய்திகளை அறிக்கையிட்ட தமிழ் ஊடகவியலாளரான திஸ்ஸநாயகத்துக்கு எதிராக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அசாதாரணமாக சிறைத் தண்டனை வழங்கப்பட்டது குறித்து இலங்கை ஊடகங்கள் யோசிக்கும் விதம் குறித்து புரிந்து கொள்வது முக்கியமாகும்.

தீர்ப்பு வழங்கப்பட்ட ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி திங்கள் முதல் அக்டோபர் 6ஆம் திகதி வரையிலான ஒருவார காலப்பகுதிக்குள் ஊடகங்களை ஆய்வு செய்த போது இந்த தீர்ப்பு மூலம் ஊடகங்களுக்க விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்து ஊடகங்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. சம்பவத்தை அறிக்கையிடும் போது பக்கச்சார்பின்றியும் அதேபோல் இந்த அறிக்கையிடல் மூலம் அச்சுறுத்தல் குறித்து சில ஊடகங்கள் சிறிதளவு கருத்து தெரிவித்திருந்தாலும் அச்சுறுத்தல் குறித்து போதுமான கருத்துகளை முன்வைத்ததாகத் தெரியவில்லை. அரச ஊடகங்களைப் போல் இனவாத அறிக்கையிடலில் முதன்மை வகிக்கும் சில ஊடகங்கள் திஸ்ஸநாயகம் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டதை நியாயப்படுத்தி அறிக்கையிடலை மேற்கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு மத்தியில் ஊடக நிறுவனங்கள் சிலவும், ஊடகவியலாளர்கள் சிலரும் ஊடகங்கள் எதிர்காலத்தில் எதிர்நோக்கவுள்ள அச்சுறுத்தலைக் கண்டும் திஸ்ஸநாயகத்தை நியாயமற்ற முறையில்

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

குற்றவாளியாக்கப்பட்டுள்ள விதத்தையும் சுட்டிக்காட்டி பயனுள்ள கருத்தாடல்களை மேற்கொள்ள முயற்சித்து வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

ஆய்வுக்குட்பட்ட நாளாந்த முக்கிய சிங்களப் பத்திரிகைகள் நான்கும் தீர்ப்பு வழங்கப்பட்ட மறுதினம் இது குறித்து செய்தி வெளியிட்ட போதும் இரண்டு பத்திரிகைகள் முதற்பக்கத்தில் சிறிய செய்தியாக வெளியிட்டிருந்தன. தீர்ப்பு குறித்து மிகச் சுருக்கமாக ஒரு செய்தியில் குறிப்பிட்டிருந்ததுடன் மற்ற பத்திரிகை மிக விளக்கமாக செய்தியை வெளியிட்டிருந்தது. அதில் திஸ்ஸநாயகத்துக்காக ஆஜரான சட்டத்தரணி அவரது ஊடக நடவடிக்கைகளை பாராட்டி வெளியிட்ட கருத்துகளைச் சேர்த்தும் திஸ்ஸநாயகம் தமிழ் மக்களது மனிதாபிமான பிரச்சினைகளுக்காக மட்டுமன்றி சிங்கள சமூகத்தின் மனித உரிமைகளுக்காக பாடுபட்ட மக்கள் சேவை ஊடகப் பொறுப்பை நிறைவேற்றியவர் எனவும் தமது வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்துள்ளது. இருந்தும் தலைப்புடன் காணப்படும் உப தலைப்பில் “இனவாதத்தை தூண்டும் பயங்கரவாதிகளுக்கு உதவிய குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி” எனக் குறிப்பிட்டுள்ள விதம் பத்திரிகை கொண்டுள்ள கருத்தை ஓரளவு புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. எப்படியிருந்தும், இரண்டு பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக திஸ்ஸநாயகத்துக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை வெளியிட்டிருந்தாலும் மேற்கூறிய இரு பத்திரிகைகளையும் விட மாறுபட்ட விதத்தில் தீர்ப்பை நியாயப்படுத்தும் வகையில் அது செய்தி வெளியிட்டுள்ளது. சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் செய்திகள் / கட்டுரைகள்/ ஆசிரியர் தலையங்கம் / பத்தி என 18 ஆக்கங்கள் சிங்களப் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன. ஒரு ஞாயிறு பத்திரிகையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கருத்துச் சுதந்திரத்துக்கு பாரிய அச்சுறுத்தலாகும் விதத்தை ஆசிரியர் தலையங்கத்தில் தெளிவுபடுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். சகல பத்திரிகைகளுக்கும் மேலாக, ராவய பத்திரிகையில் ஜனரஞ்சன எழுதியுள்ள கட்டுரை மிக முக்கியமானதாகவிருப்பதால் அவரது பெயரைக் குறிப்பிடுவது தவறல்ல. அதில் திஸ்ஸநாயகம் கைது செய்யப்பட்டது நியாயமற்றது என்பதிலிருந்து சட்டத்தின் சமமான கவனிப்பை பெற்றுக் கொள்வதில் டி.ஐ.டியும் சட்டமா அதிபர் திணைக்களமும் அவருக்கிளைத் அநீதி, தீர்ப்பு போன்ற சகல விடயங்களும் அடங்கிய ஒரு ஆய்வாக அமைந்துள்ளது. திஸ்ஸவின் ஊடக செயற்பாடுகளைப் பாராட்டி அவர் இனவாதியோ, இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்த முயற்சித்தவரோ அல்லவென்பதை தெளிவுபடுத்தி வழங்கப்பட்ட தீர்ப்பினால் ஊடக சுதந்திரத்துக்கு கடும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக திஸ்ஸநாயகத்தின் சட்டத்தரணி தெரிவித்த கருத்தும் கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. திஸ்ஸநாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை சட்டத்தின் வரம்பை மீறிய கொடூர மனிதாபிமானமற்றதென்றும் தமது உள்ளக்குமுறலை எழுதியதால் ஊடகவியலாளரொருவருக்கு இருபது வருட தண்டனை வழங்குவது எந்த வகையில் பார்த்தாலும் வரம்பு மீறிய தண்டனை எனத் தெரிவிக்கப்பட்டிருக்கும் அக்கட்டுரையில், பயங்கரவாத தடுப்புச் சட்ட மூலத்தை ஒரு பக்கச்சார்பாக ஊடக அடக்குமுறைக்கு பாவிக்கும் விதம் குறித்தும் வாசகர்களுக்கு தெளிவை ஏற்படுத்தியுள்ளது. “இரண்டு கட்டுரைகள் எழுதியதற்காக இருபது வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கும் நாடு” என்ற தலைப்பை கட்டுரைக்கு சூட்டி இந்த நாட்டின் ஊடக சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் அதேபோல் நீதிமன்றத்தின் நேர்மை ஆகியன கேள்விக்குறியதாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்பத்திரிகை மேலும் கட்டுரைகள் / பத்தி/ செய்திகள் ஆகியவற்றை வெளியிட்டு இச்சம்பவத்துக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளது. திஸ்ஸநாயகத்துக்கு துணிச்சல் மற்றும் ஊடக நெறிக்காக ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் பீட்டர் மெக்லர் விருதை வழங்குவதற்கு எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தீர்மானித்துள்ளதாக முதற் பக்கத்தில் செய்தி வெளியிட்டிருப்பதுடன், அவருக்கு ஊடக சுதந்திரத்துக்கான விருதை வழங்குவதற்கு பத்திரிகை கலைஞர்களைப் பாதுகாக்கும் குழு தீர்மானித்துள்ளதாக மற்றொரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் பத்திரிகைகள் நான்கும் இத்தீர்ப்பை தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளன. அரச கட்டுப்பாட்டு தமிழ்ப் பத்திரிகை தீர்ப்புக்கு சார்பான விதத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. ஏனைய பத்திரிகைகள் மூன்றும் திஸ்ஸநாயகத்தின் சட்டத்தரணி தெரிவித்த கருத்துகளுடன் செய்தி வெளியிட்டுள்ளது. இதன் மூலம் திஸ்ஸநாயகத்தின்

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

ஊடக செயற்பாடுகளின் முக்கியத்துவம் மற்றும் தீர்ப்பின் கடுமை குறித்தும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. துணிச்சல் மற்றும் ஊடக நெறிக்கான ஊடகவியலுக்காக வழங்கப்படும் பீட்டர் மெக்லர் விருது மற்றும் ஊடக சுதந்திர விருது ஆகியன வழங்கப்படவுள்ளதாக மூன்று தமிழ்ப் பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டுள்ளன. நம்ப முடியாத தீர்ப்பு குறித்து கவலை தெரிவித்து பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கும் அச்சுறுத்தல் தொடர்பாக கண்டனம் தெரிவித்து பல்வேறு சர்வதேச அமைப்புகள் விடுத்துள்ள அறிக்கைகளையும் மேற்கண்ட மூன்று பத்திரிகைகளும் வெளியிட்டுள்ளன. தலைப்புச் செய்திகள் உட்பட 33 செய்திகளை இப்பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. இவற்றில் ஆசிரியர் தலையங்கங்கள் மூன்றில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கொடூரத்தை ஆராய்ந்து திஸ்ஸநாயகத்தின் தீர்ப்பை விமர்சனத்துக்குள்ளாக்கியுள்ளன. நாளாந்த சிங்களப் பத்திரிகைகளைப் போல் தமிழ்ப் பத்திரிகைகளும் தீர்ப்பு குறித்து அரச பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துகளுக்கும் இடமளித்துள்ளன.

யுத்தத்துக்குப் பின்னர் பக்கச்சார்பற்ற அறிக்கையிடலை மேற்கொள்ளும் நாளாந்த ஆங்கிலப் பத்திரிகை இத்தீர்ப்பு தொடர்பாகவும் அதேபோன்ற அறிக்கையிடலை மேற்கொண்டுள்ளது. திஸ்ஸநாயகத்தின் ஊடக செயற்பாடு, தீர்ப்பு, திஸ்ஸநாயகத்தின் சட்டத்தரணி அணில் டி சில்வாவின் கருத்துகள் ஆகியன மூலம் தமது வாசகர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் தலைப்புச் செய்தியாக இச்சம்பவத்தை வெளியிட்டுள்ளது. அதேபோல் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அனுரபிரியதர்ஷன யாபா இது தொடர்பாக தெரிவித்த கருத்துக்களையும் முக்கிய செய்தியாக வெளியிட்டுள்ளது. இச்செய்திக்குள் திஸ்ஸநாயகத்தை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும் புகைப்படத்துடன் கைது செய்யப்பட்டது, சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டது தொடர்பான சில குறிப்புகளைச் சேர்த்து வாசகர்கள் புரிந்து கொள்ளும் வகையில் பக்கச்சார்பற்று தனது அறிக்கையிடலை மேற்கொண்டுள்ளது. அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகை அந்த நிறுவனத்தின் சிங்கள தமிழ் பத்திரிகைகளைப் போல் தீர்ப்பை நியாயப்படுத்தும் விதமாக ஒரு செய்தியை வெளியிட்டிருப்பதுடன் மேலும் சில ஆங்கிலப் பத்திரிகைகளும் இதேபோன்ற வகையில் செயற்பட்டுள்ளன. மேலுமொரு திஸ்ஸநாயகத்துக்கு தீர்ப்பு வழங்கிய தினத்தில் தீர்ப்பு வழங்கிய நீதிபதிக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பதை தலைப்புச்செய்தியாக வெளியிட்டுள்ளது. திஸ்ஸநாயகம் பத்திக் கட்டுரையொன்றை எழுதியுள்ளதாக குறிப்பிடும் பத்திரிகை சிறிய செய்திகள் இரண்டை வெளியிட்டு தமது ஊடகவியலாளருக்கு நடந்த அநீதி குறித்து சிறிதும் கவலைப்பட்டதாக காட்டிக் கொள்ளவில்லை. ஆங்கிலப் பத்திரிகைகளுக்குள் ஆய்வு பூர்வமான அறிக்கையிடலை மேற்கொண்டிருப்பது வார இறுதிப் பத்திரிகையான சண்டே லீடராகும். ஆசிரியர் தலையங்கம், இரண்டு பங்கங்களில் இது தொடர்பான விளங்கங்களையும் மற்றும் மேலும் இரண்டு கட்டுரைகளையும் இது தொடர்பாக வெளியிட்டுள்ளன. குற்றப் பத்திரிகையின் சாராம்சம், திஸ்ஸநாயகத்தின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அவரைக் குற்றவாளியாக்கிய அவர் எழுதிய கட்டுரைகள் இரண்டையும் வெளியிட்டுள்ள இரண்டு பக்க கட்டுரையில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாகவுள்ள விதம் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது. இப்பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்திலும் இச்சம்பவத்தின் மூலம் நாட்டின் ஜனநாயகத்துக்கு சவால் விடுப்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. இச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலப் பத்திரிகைகள் மாத்திரமே கேலிச் சித்திரங்களை வெளியிட்டுள்ளன. அவற்றின் எண்ணிக்கை நான்காகும்.

தேசிய தொலைக்காட்சி தவிர்ந்த ஏனைய தொலைக்காட்சி சேவைகள் தீர்ப்பு தொடர்பான செய்திகளை ஒளிபரப்பின. சக்தி தொலைக்காட்சி வலையமைப்பு இச்செய்தியை இரண்டாவது முக்கிய செய்தியாக ஒளிபரப்பியது. தெரண தொலைக்காட்சியும் தலைப்புச் செய்திகளுடன் இதை ஒளிபரப்பியதுடன் சுயாதீன தொலைக்காட்சி முக்கியத்துவமளிக்காமல் இச்செய்தியை ஒளிபரப்பியது. இதில் சக்தி தொலைக்காட்சி வலையமைப்பின் அறிக்கையிடல் விளக்கமாகவிருந்ததுடன் தீர்ப்பின் பயங்கரத்தையும் விளக்குவதாகவிருந்தது. இதற்கு சுதந்திர ஊடக இயக்க செயலாளரின் கருத்தும் சேர்க்கப்பட்டிருந்தது. தெரண மற்றும் சுயாதீன தொலைக்காட்சிகளின் அறிக்கையிடல் சமமானதாகக் காணப்பட்டது. அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகைகளைப்

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

போலவே இவற்றின் அறிக்கையிடல்களும் காணப்பட்டன. திஸ்ஸநாயகத்துக்கு பீட்டர் மெக்லர் விருது வழங்கப்படவுள்ளதாக சக்தி தொலைக்காட்சி வலையமைப்பு மாத்திரமே செய்தி ஒளிபரப்பியது. எப்படியிருந்தும் அச்சு ஊடகங்களுடன் ஒப்பீட்டளவில் பார்க்கும் போது இலத்திரனியல் ஊடகங்களில் கருத்தாடல்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டன.

திஸ்ஸநாயகத்தின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தது போல் திஸ்ஸநாயகத்தின் தலைவிதி என எதிர்காலத்தில் இந்நாட்டு ஊடகவியலாளர்கள் செயற்பட வேண்டிய விதத்தைக் கற்றுக்கொள்ளும் பாடமென பல ஊடக செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவருக்கு நேர்ந்துள்ள கதி குறித்து உலகம் கவலையடைந்தாலும் இலங்கை ஊடகத்துறையில் முதுகெலும்புள்ள சில துணிச்சலான ஊடகவியலாளர்கள் மாத்திரம் குரல் எழுப்பும் போது ஏனையோரில் சிலர் மௌனம் சாதித்தும் சிலர் தீர்ப்புக்கு ஆதரவான அறிக்கையிடலை மேற்கொண்டிருப்பது மேற்கூறிய பாடம் குறித்து அச்சமுற்றிருப்பதினாலா? தமக்கு இது போன்ற நிலை ஏற்படாதென்ற நம்பிக்கை காரணமாகவா? இல்லாவிட்டால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் சிக்கிய முதலாவது ஊடகப் பலி திஸ்ஸநாயகம் தமிழர் என்பதற்காகவா? வேறு விதமாகக் கூறினால் சிங்கள இனவாதத்தை தூண்டும் வகையிலான அறிக்கையிடல்கள், கருத்து வெளிப்படுத்துதல் சரித்திர காலம் முதல் பார்த்து கேட்ட சமூகத்துக்கு பிழையாகத் தெரிவது தமிழ் இனவாதத்தைத் தூண்டும் எனக் கூறும் அறிக்கை மட்டுமென்பதாலா?

**சீதா ரஞ்சனி**
**seetha@cpalanka.org**

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com